**தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றாடல் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி, பதுள்ள, நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் செழிப்பற்ற விவசாய காணிகளை புனமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட காணிகளுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறாக ரூபா 1,179,220 செலவிடப்பட்டிருந்தது. அச் செலவுகளை அமைச்சின் காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்தலின் கீழ் காட்டப்பட்டமையின் காரணமாக அமைச்சுக்கு சொந்தமான சொத்துக்களின் மதிப்பீட்டினை பிழையாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. | இத்திட்டத்தின் ஆரம்பம் முதற்கொண்டே செலவின விடய அடையாள இலக்கம் 2015 என பெற்றுத் தரப்பட்டிருந்தமையால் காணிகளினை மேம்படுத்தலின் கீழ் அத்திட்டத்தின் செலவினத்தை வருடாந்தம் கணக்கறிக்கைகளில் காட்டப்படும் இத்திட்டத்தினை ஆரம்பிக்கும் போது திறைசேரி மூலமாக இவ் அடையாள இலக்கத்தின் கீழ் வரவு செலவு ஒதுக்கீட்டினை பெற்றுத்தரப்பட்டமையினால் இதுவரையிலும் அச்செலவின விடயத்தின் கீழ் வருடாந்தம் ஒதுக்கீடு ஒதுக்கப்படுவதுடன் செலவினத்தினை அச்செலவின விடயத்தின் கீழ் கணக்கிலிடப்படுகின்றது. இத்திட்டம் தற்போது முடிவடைந்துள்ளது. | தனியார் காணிகளுக்காக செலவிடப்பட்ட செலவினை அமைச்சின் காணிகளாக காட்டப்பட்டுள்ளமை திருத்தப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சுற்றாடல் அமைச்சினால் நடாத்திச் செல்லப்படும் ''சௌபாதம் பியச'' எனும் கட்டிடம் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டு | அமைச்சின் ''சௌபாதம் பியச'' எனும் கட்டிடத்தின் மதிப்பீட்டு பெறுமானம் ரூபா 261 மில்லியன் என | காணியினை சட்டபூர்வமாக கையேற்பதற்கும் மற்றும் காணிகளின் |

| | | |
|---|---|---|
| பெறுமானமான ரூபா 261,000,000 நிதிசாரா சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் மற்றும் காணிகளினை சட்டபூர்வமாக கையேற்பதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டில்லாததுடன் கட்டிடத்தின் பெறுமானமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் ரூபா 1,013,366,589 ஆகும். இப்பெறுமானமானது கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது இதுவரை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட தொகையினை ஆவதுடன் அத்தொகையினை நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா செத்துக்களுக்கான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்து வதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் முகாமைத்துவ சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மோசடி சம்பந்தமாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 260,361 ஆனது 2021 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாத கட்டுநிதி நிலுவையாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தன. கணக்காய்வினை மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 ஏப்ரல் 08 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அத்தொகையினை சுற்றாடல் அமைச்சின் பெயரில், காசோலை மூலம் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யும் படி, அவ் உத்தியோகத்தர் தற்போது பணிபுரியும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் தலைமை அதிபதியிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பணத்தினை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஹய்ட்ரோக்லோராப் இரசாயன கரிப்பொருளினை சம்பந்தமான பங்கு உரிமம் பத்திரத்தினை வழங்கும் போது இறக்குமதி செய்யப்படும் அப்பொருளுக்காக ஒரு கிலோகிராமுக்கு ரூபா 10 வீதமான அரசாங்க கட்டணத்தினை அமைச்சினால் அறவிடப்பட்டதுடன் 2021 வருடம் சேகரிக்கப்பட்ட மொத்த அரச கட்டண வருமானம் ரூபா 1,560,394 ஆகும். இவ்வருமானம் அரச திரண்ட நிதிக்கு சேர்க்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த வருமான மதிப்பீட்டினுள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மொன்ட்ரியல் கூட்டுத் திட்டத்தின் மூலம் எதிர்வரும் வருடங்களுக்கான பங்கு உரிமப் பத்திரம் வழங்கும் செயற்தொடர் மற்றும் ஏனைய விடயங்களினையும் மேற்கொண்டு ஆராயப்பட்டதன் பின்னர் இதனை வருமான மதிப்பீடுகளினுள் புகுத்துவது பொருத்தமானது என உறுதியாயின் அதன்படி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரச வருமான மதிப்பீட்டினுள் இனங்காணும் தேவையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய ஒதுக்கீடான ரூபா 89,400,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டினுள் தேவைப்பாடுகள் ஏற்படாமை, வேண்டுகோள் பெறப்பாடமை, BUR அறிக்கையினை தயார் செய்வதை விடவும் முதலில் வெளிப்படைத் தன்மைக்கான இரண்டாற்றிக்குரிய அறிக்கையினை (Biennial Transparency Report-BTR) தயாரிப்பது அதனிலும் பொருத்தம் என பரிந்துரைக்கப்பட்டமை, அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்ட தாமதம், மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் பணத்தினை விடுவிப்பதற்காக 2021 திசெம்பர் 27 ஆந் | செலவினத்திற்கான மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டு பயனுள்ள வகையில் பாவனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திகதியன்று பெற்றுத்தரப்பட்ட உடன்பாட்டினை ஆகிய காரணங்களினால் 2021 வருடத்தினுள் மேற்படி திட்டத்திற்காக ஒதுக்கீட்டினை செலவு செய்யும் தேவைப்பாடு இருக்கவில்லை. | |
| (ஆ) | 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபா 225,100,000 இதில் நூற்றுக்கு ஐம்பது சதவீதத்திற்கும் மேலான அளவினை செலவிடப்படாது சேமிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அமைச்சரவை முடிவின் படி புதுக் கொள்வனவுகள் நிறுத்தப்பட்டமை, உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து கோரல்கள் பெறப்படாமை, கொவிட் தொற்று நிலைமை காரணமாக பயிற்சி வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்வது நடைமுறையில் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணிகளினால் இவ் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டன. | காலத்திற்கு காலம் செலவினங்கள் ஆராய்தலுக்கு உட்பட்டு பயனுள்ள வகையில் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 3 இன் படி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குட்பட்ட அலுவல்கள் முன்னர் முடிவு செய்யப்பட்டு அவற்றினை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சரவை முடிவினை பெறப்படுவதற்கு முன்னதாகவே ரூபா 19,350,000 பெறுமதி வாய்ந்த 03 திட்டங்கள் மீளாய்வாண்டினுள் வரவு செலவுத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் முழுப் பெறுமதியினை 2021 வருடம் திசெம்பர் மாதம் நிதிப்பிரமாணம் 66 மூலமாக வேறு திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. | 2020 வருட ஆரம்ப கட்டத்தில் இத்திட்டங்களுக்கான நிதி உதவியினை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட வெளிநாட்டு உதவியினை வழங்கும் நிறுவனங்கள் உடன்பாடு தெரிவித்திருந்தன. அதன்படி திட்டங்களின் அலுவல்கள் சாதாரண முறையில் ஆரம்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், சனாதிபதி செயலாளரின் 2019 திசெம்பர் 19 ஆந் திகதிய மற்றும் இலக்கம் **PS/SP /SB/Circular/**06/2019 கொண்ட சுற்றுநிருபத்திற்கு அமைய வெளிநாட்டமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அதன்போது வெளிநாட்டு அமைச்சினை உடன்படிக்கையினை மாற்றியமைப்பதற்கான | திட்டங்களை செயற்படுத்து வதற்கு முன்னர் முன் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு முற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆலோசனை வழங்கியது. அதற்கு வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் உடன்படாமையினால் திட்ட வேலைகளினை முன்னெடுத்து செல்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்தமையினால் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும் வரை திட்ட வேலை எதனையும் செயற்படுத்தப்படவில்லை. அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக திட்ட வேலைகளை செயற்படுத்த முடியாமல் போனதுடன் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பயனுள்ள வகையில் பாவனை மேற்கொள்வதன் பொருட்டு வேறு திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. | |
| (ஈ) | 2020 திசெம்பர் 23 ஆந் திகதி வரவு செலவு சுற்றுநிருபம் இலக்கம் 07/2020-2021 செலவினத்திற்கான அதிகாரம் வழங்கல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம் எனும் சுற்றுநிருபத்தின் 03 ஆவது பந்தியின் பிரகாரம் வருடாந்த செயற்படு திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தினை தயாரிக்கும் போது முதல் காலாண்டிலிருந்து கொள்வனவு மேற்கொள்ளல் மற்றும் பணம் வழங்கலினை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அலுவல்கள் திட்டமிடப்பட வேண்டும். ஆயினும், இறுதி காலாண்டில் பணம் வழங்குவதனை மெற்கொள்ளக் கூடியவாறு திட்டமிடப்படுவதனால் எளிதில் ரொக்கமாகக் கூடிய சௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரும் | திட்டங்களினை செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட அலுவல்கள் வருட முதல் காலாண்டில் மேற்கொள்ளப்படுவதுடன் சில சமயம் முதல் காலாண்டின் முன்னேற்றத்திற்கமைய இரண்டாவதும் மூன்றாவதும் காலாண்டுகளின் போது சிற்சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். ஆகையால், முதல் காலாண்டில் செலவினம் குறைவது சாதாரண நிலைமையாவதுடன் பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்கள் வருட இறுதியலான காலாண்டு வரை நீடிக்கும். நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவுற்றதன் பின்னர் உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் மற்றும் பணம் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனால் இறுதி காலாண்டில் | வருடம் முழுவதும் செலவினங்கள் பகிர்ந்து செல்லும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பதனை விளக்கமளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 வருடம் மொத்த செலவினத்திற்கு நேரொத்த முதல் காலாண்டு செலவினம் நூற்றுக்கு 16 வீதமாக இருந்த போதிலும் இறுதி காலாண்டில் மொத்த செலவினத்தில் நூற்றுக்கு 41 வீத அளவிலான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அமைச்சினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 15,541,881 பெறுமதிக்கான பொறுப்புக்களுக்கும் மற்றும் "காப்போம் ஆற்றினை" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 18,195,039 பெறுமதியான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | செலவினங்கள் அதிகரிப்பது சாதாரண நிலைமையாகும். சுற்றாடல் பாதுகாப்புக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சரிடமிருந்து மாவட்ட செயலாளர்களிடம் ஒதுக்கீடுகள் விடுக்கப்பட்டிருந்த மையினால் அவ் ஒதுக்கீட்டு எல்லை வரையிலான இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதான இயலுமை இருப்பதுடன், திறைசேரியினால் வழங்கப்படும் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையினால் அம் மாவட்ட செயலாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி இப்பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. | |
| (உ) | மேற்படி சுற்றுநிருபத்தின் 06 ஆம் பந்தியின் படி ஒதுக்கீட்டினை வழங்குவது மிகவும் கடினமான காரியமாக உள்ளதனால் 2021 வருடத்தில் ஏற்படக்கூடிய செலவினங்களை பெற்றுத் தரப்பட்டுள்ள ஒதுக்கீட்டினை நன்றாக முன்னிலைப்படுத்தப்பட்டு முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் செலவின விடயம் 160-2-3-145-2509(ii) மற்றும் செலவின விடயம் 160-2-6-146-2509(13) ஆகிய இரண்டின் படி செயற்பட்டிருக்கவில்லை. | திட்டங்களினை செயற்படுத்தும் போது வருட இறுதிக் கட்டத்தின் போது நாட்டில் ஏற்பட்ட கடும் மழை வீழ்ச்சி காரணமாக மாவட்ட செயலாளர்களிடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் முழுவதையும் பாவனை மேற்கொள்வதற்கு இயலாது போய் இருந்தமையினால் இந்நிலைமை உருவானது. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை செயற்திறனுடன் பாவனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | செலவின விடய இலக்கம் 160-2-3-118-2507(II) கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா 20 மில்லியன் ஆனதுடன் வருட இறுதியாகும் போது | வருடாந்த செயற்படு திட்டத்தில் உட்படும் அதிகபடியான நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதி வரையிலும் செயற்படுவதுடன் | நிகழ்ச்சித் திட்டத்தின் பின் ஆராய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் |

| | | |
|---|---|---|
| செலவினம் ரூபா 1.6 சேமிப்பாக இருந்தது. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினத்தினை பரீட்சிக்கும் போது மொத்த செலவினத்தில் நூற்றுக்கு 75 ஆன செலவுகள் 2021 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அந்நிகழ்ச்சித் திட்டங்கள் பெரும்பாலும் முடிவடைவது வருட இறுதியிலான சில மாதங்களினாலாகும். ஆகையால் வருட இறுதியிலான சில மாதங்களில் செலவினங்கள் அதிகரிப்பதும் மற்றும் ஏனைய மாதங்களில் செலவினங்கள் நேரொத்த குறைவதும் உண்டு. | ஒதுக்கீடுகள் செயற்திறனுடன் பாவனை செய்யப்பட வேண்டியமை. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 160-2-3124-2509(II) கொண்ட செலவின விடயத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நபர்கள், சங்கங்கள் மற்றும் இயக்கங்களுக்கான ரூபா 15,451,881 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கான பெறுமானம் பதிவாகி இருந்தது. மேலும் 160-2-3145-2509(II) கீழ் காப்போம் ஆற்றினை எனும் தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நபர்கள், சங்கங்கள் மற்றும் இயக்கங்களுக்கான ரூபா 18,195,039 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் என கணக்காய்விற்காக முன் வைக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன. ஆயினும், அப்பொறுப்புக்களினை உறுதி செய்வதற்குரிய ஆவணங்கள் திட்டக் கல்விப் பிரிவில் காணப்படவில்லை. இத்திட்டங்களுக்கான பணச் செலுத்தல்கள் மேற்கொள்ளும் போது அது தொடர்பான பின்னூட்டலினை அமைச்சு மூலம் மேற்கொள்ளப்படாமையினை கணக்காய்வின் போது உறுதியாயிற்று. | காப்போம் ஆற்றினை எனும் திட்ட பிரேரணை மூலம் முன்வைக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக பிரதேச செயலாளர் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் காப்போம் ஆற்றினை செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. செலவினங்கள் தொடர்பான விபரக் கோவைகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலம் பராமரிக்கப்படுகின்றன என்பதனை அறியத் தருகின்றேன்.<br><br>இந்த நிகழ்ச்சித் திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் செயற்படுத்தப்படுவதுடன் அங்குள்ள சுற்றாடல் உத்தியோகத்தர்கள் மூலம் மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மேற்பார்வை செய்யப்படுவதுடன் அமைச்சின் மூலமாக மாவட்ட செயலாளர்கள், தொடர்பு கொள்ளப்பட்டு திட்டங்களினை செயற்படுத்தும் முன்னேற்றத்தினை பற்றிய | திட்டங்களின் முன்னேற்றத்தினை தொடர்ந்து பரீட்சிக்கும் பொறுப்பினை உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் மற்றும் அவரின் அவதானிப்பின் அடிப்படையில் பணத்தினை விடுவித்தல். |

| | | |
|---|---|---|
| | ஆலோசனைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. சுற்றாடல் பாதுகாப்புக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் ''பசுமை முயற்சியாண்மை மேம்பாட்டின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 வருடம் தெரிவு செய்யப்பட்ட பயன்பெறுனர்களுக்கு வழங்குவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுக்கும் போது 2021.12.30 இல் உள்ளவாறாக ஒதுக்கீடு வழங்கப்பட்ட பயன்பெறுனர்களின் பெயர் பட்டியலுடனான பதிவினை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2022.02.03 மற்றும் 2022.02.17 திகதிகளில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டமை தொடர்பாக மாவட்ட செயலாளர்களிடம் மீண்டும் விசாரிப்பு மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஒதுக்கீடு வழங்கல்கள் தொடர்பான பதிவுகள் 17 மாவட்டங்களிலிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன. | |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தங்களுக்கான நிறுததி வைக்கப்பட்டுள்ள பணத் தொகையினை தொடர்பான திறைசேரி பொது வைப்புக் கணக்கின் கீழான ரூபா 30,737,540 மீதியொன்று இரண்டு வருட காலத்திற்கும் மேலாக பொது வைப்புக் கணக்கில் காணக்கூடியதாக இருப்பதுடன் நிதிப் பிரமாணம் 570(இ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | CECB நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட சகல பற்றுச்சீட்டுக்களுக்குமான செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் கட்டிட திணைக்களத்தின் மூலம் இறுதிச் பற்றுச்சீட்டுக்கள் அத்தாட்சிப்படுத்திக் கொண்ட பின்னர் ஒப்பந்த வைப்புப் பணத்தினை விடுவிப்பதற்கான | நிதிப் பிரமாணப் படி செயற்பட வேண்டும். |

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104(1)(4) | சேதத்திற்குள்ளான திகதியிலிருந்து 03 மாதத்தினுள் பூரண அறிக்கையொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மார்ச் 31 வரையிலும் அமைச்சுக்கு சொந்தமான 02 வாகனங்கள் தொடர்பாகஅவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இவ்வாகனங்கள் தொடர்பாக நி.பி 104 நட்டங்கள் தொடர்பான ஆரம்ப பதிவுகள் அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமை காரணமாக சந்தையில் வாகன உதிரிப் பாகங்களின் பற்றாக்குறையினால் திருத்த வேலைகள் முடிப்பதற்கு தாமடதப்பட்டுள்ளன. இறதி அறிக்கையினை தயாரிப்பதற்காக வாகன திருத்த வேலைகள் முடிந்ததன் பின்னர் பெற்றுத் தரப்படும் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதியினைக்கான தகவல்களினை அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டியுள்ளதாக இறுதி அறிக்கையினை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணப் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 ஆம் திகதிய 2/2017 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் சகல அரச நிறுவனங்களிலும் பாவனை மேற்கொள்ளப்படும் அரசுக்கு சொந்தமான சகல வாகனங்களும் அந் நிறுவனப் பெயரில் பதியப்பட வேண்டியிருந்த | ஒரு வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட புத்தகத்தின் பிரதிகள் உள் பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் | சட்டபூர்வமான முறையில் கையேற் பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் சுற்றாடல் அமைச்சினால் பாவனை மேற்கொள்ளப்படும் 03 வாகனங்கள் அமைச்சின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் அமைச்சினைக்கு சட்டபூர்வமாக கையளிக்கப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஜீப் வாகனத்தினை கையேற்றுத்தரும்படி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிடமிருந்து அளிக்கப்பட்டுள்ளது. ஜீப் வாகனத்தை கையேற்பதற்காக பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் பதில் கிடைக்கப் பெறாமையினால் மற்றும் அமைச்சின் பெயரில் திருத்தலாகி உள்ளமையின் காரணமாக இந்த ஜீப் வண்டியினை கையேற்பது முடியாதுள்ளது. அதன்படி கையேற்பதற்கான ஏற்பாட்டினை செய்து தரும்படி கொம்றோலர் தலைமை அதிபதியிடம் வேண்டுகோள் வீடுக்கப்பட்டுள்ளது. | |

## 2.6 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண காரியாலயத்தின் முதலாம் தளத்தை (160-02-03-137-2104(11))நிர்மாணிப்பதற்காக 2021 ஆகஸ்ட் 09 ஆந் திகதி அமைச்சினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் ரூபா 5,000,000 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட அலுவலுக்காக அமைச்சரவையின் முடிவு 2021 ஒக்தோபர் 06 ஆந் | பதில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | சட்டபூர்வ அங்கீகாரத்தின் பின்னர் பணம் விடுவிக்கப்பட வேண்டும். |

திகதியன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சரவையின் முடிவு கிடைக்கப் பெறுவதற்கு முன்னரே பணம் விடுவிப்பினை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் (Outcome) பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மே 25 ஆந் திகதிய அமப 21/0833/321/007 கொண்ட அமைச்சரவை முடிவின் படி அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த பசுமை முயற்சியாண்மை மேம்படுத்தல் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 36,462,821 ஆகியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேறியிருக்கவில்லை. | நாட்டினுள் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நிகழ்ச்சித் திட்டத்தின் போது சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பயன்பெறுனர்களுக்கு ரூபா 50 மில்லியன் ஒதுக்கீட்டினை விடுவிக்கப்பட்ட போதிலும் தேவையான கட்டுநிதி தொகையினை போதியளவு திறைசேரியினால் விடுவிக்கப்படாமையினால் இவ் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டம் 2021 வருடம் நிலவிய குறைபாடுகளினை இனங்கண்டு கொண்டு இவ்வருடம் மேற்கொண்டு அமுல் நடாத்தப்படும். | நிகழ்ச்சித் திட்ட முன்னேற்றத்தினை தொடர்ந்தும் பின்னூட்டல் செய்தல் மற்றும் முன்னேற்ற பதிவினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 ஏனைய அவதனிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021-2030 வருடங்களுக்கான தேசிய சுற்றாடல் செயற்படு திட்டம் கணக்காய்வினை மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் வரைவு நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அச்சினைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | திட்டத்தினை செயற்படுத்தும் நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவி திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சனாதிபதி செயலாளரின் 2019 திசெம்பர் 19 ஆந் திகதிய மற்றும் இலக்கம் PS/SP/SB/Circular/06/2019 கொண்ட சுற்றறிருபத்தின் 2 பிரிவின் பிரகாரம் திட்டங்கள் தொடர்பாக அமைச்சரவையின் இறுதியான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்படாமல் மேற்கொண்டும் எவ்வித கடப்பாடுகளும் ஏற்படுத்திக் கொள்வது அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஆயினும் அமைச்சினால் பாதரசம் பாவனையை குறைப்பதற்காக தேசிய கொள்ளவினை வலுவூட்டுவதன் மூலம் இலங்கையில் பாதரசம் அடங்கியுள்ள கழிவுப்பொருட்களை சுற்றாடலுக்கு சாதகமான முறையில் முகாமைத்துவப்படுத்தல், கல்லீரல் உயிரணுக்களின் புற்றுநோய் நிலைமைக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டு கல்லீரலின் பாதுகாப்பினைக்காக சிகிட்சை முறையாக பாதரசம் அடங்கிய லோகநாதரச எனும் ஔடத பாவனை மற்றும் மக்களினை மையமாகக் கொண்ட சுற்றாடல் முறைமையின் அணுகுமுறையால், வனங்கள், விவசாயம், மற்றும் உல்லாசத்துறை ஆகியவற்றை ஒன்றிணைத்து முகாமைத்துவப்படுத்தல் ஆகிய திட்டங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | பாதரசப் பாவனையுடன் கலப்படமாகும் கழிவுப் பொருட்களினை குறைப்பதற்காக தேசிய கொள்ளளவினை விருத்தி செய்தல், மற்றும் லோகநாதரச ஔடதப் பாவனைப் பற்றிய கற்கை எனும் திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தேசிய திட்ட வகுத்தல் திணைக்களத்தின் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் திட்ட ஒப்பந்தத்திற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை 2021.03.02 திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சினை சம்பந்தப்பட்ட நிதி உதவி வழங்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆயினும் அதற்குப் பின் வெளிநாட்டமைச்சினால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களின் சில பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதாக அமைச்சு நிதியுதவி வழங்கும் நிறுவனங்களிடம் அறிவுறுத்தியது. அதன் போது நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் அத்திருத்தங்களுக்கு உடன்படாமையினால் உருவான இப்பிரச்சினையை தீர்க்கப்பட்டு திட்டங்களை அமுல் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் | ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்பாக அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் ஒன்றினை சமர்ப்பிக்கப்பட்டது. 2021.09.28 ஆந் திகதி இத்திட்டத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. தற்போது மேற்படி திட்டங்களின் செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. மக்கள் மைய சுற்றாடல் முறைமையின் அணுகுமுறை ஊடாக வனங்கள், விவசாயம் மற்றும் உல்லாசத்துறை ஆகியன ஒன்றிணைந்து முகாமைத்துவப்படுத்தும் உலகமய வசதி வழங்கல் திட்டத்தின் கீழ் UNDP நிறுவனம் ஊடாக இலங்கைக்கு கிடைத்த நிதியுதவி திட்டமாகும். திட்டத்திற்கான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டத்திற்கான ஒப்பந்தப் பத்திரங்கள் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்தமையுடன் அவ்வாறு செய்யாப்படாவிடின் சம்பந்தப்பட்ட திட்டத்தினை நம்நாட்டுக்கு கிடைக்காமல் போய்விடக்கூடிய அபாய நிலை ஏற்பட்டமையினால் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்ததன. அமைச்சரவை அங்கீகாரத்திற்கிணங்க இவ் ஒப்பந்தங்கள் கைச்சாதிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனை அறியத் தருகின்றேன்.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அமைச்சிற்குரிய ஒதுக்கப்பட்ட வாகனங்களில் இரண்டு வாகனங்கள் கராஜிகளிலும் மற்றும் மூன்று வாகனங்கள் அமைச்சின் வளவினுள்ளும் இடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதுடன் கராஜிலுள்ள வாகனங்கள் நான்கு வருட காலமாகவும் அமைச்சு வளாகத்திலுள்ள வாகனங்கள் இரண்டு வருடம் முதல் நான்கு வருடம் வரையிலான காலமாகவும் நிதி ஒதுக்கீடு இல்லாமையின் காரணமாக திருத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டளவு போதாமையினால் திருத்துவதற்கு முடியாது போனமை, சந்தையில் நிலவிய வாகன உதிரிப்பாகங்களுக்கான பற்றாக்குறை போன்ற காரணிகளினால் திருத்த வேலைகள் மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இரண்டு வாகனங்களை பாவனையிலிருந்து தள்ளுபடி செய்து அதற்கான மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் அவற்றினை வாகன தேவைப்பாடுள்ள அரச நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டு துரிதமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அமைச்சின் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளின் வெற்றிடங்களுக்கான எண்ணிக்கை 17 ஆகும். | சிரேஷ்ட மட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை பொது நிருவாக, உள்நாட்டு அலுவல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் அவ்வெற்றிடங்கள் நிரப்புவதற்காக பொது நிருவாக அமைச்சு MISCO தரவு முறைமை ஊடாக மற்றும் எழுத்து மூலம் இடைநடுவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சேவைக்கான தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் அமைச்சில் இரண்டாம் மட்டப் பதவியான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் இரண்டு மேலதிகமாக காணப்பட்டன. | சேவைத் தேவைப்பாட்டினை நிமித்தம் சுற்றாடல் அமைச்சினைக்கு தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கையினை விடவும் 30 மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அங்கீகரித்து தரும் படியான நி.பி 71 இன் கிழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலாளர்களின் வேண்டுகோளின் படி ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்காகவும் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளினை கவனத்திற் கொண்டு சுற்றாடல் அமைச்சினைக்கு 391 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை ஏற்படுத்துவதற்காக நி.பி 71 இன் கீழ் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சேவைகளுக்கான தேவைப்பாட்டினை கவனத்தில் கொள்ளப்பட்டு அத்தியாவசியமான பதவிகள் எண்ணிக்கையினை மாத்திரம் உள்ளடங்கும் படியான பதவிகள் எண்ணிக்கை களினை திருத்தப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |